**தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் - 2015**

---

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரச்சட்டத்தின் 29(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரச அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை இளைஞர் சேவைகள் மன்றத்தின் தலைவருக்குப் பின்னர் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிதி நிலைமை மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க உண்மையானதும் நியாயபூர்வமானதுமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 திரட்டிய நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 98 சதவீதப் பங்கு உரித்துடன் 1981 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உப கம்பனியாக வரையறுக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டு திரட்டிய நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 தொடர்புடைய தரப்பினருடன் உள்ள கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தாமை

வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவைகள் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் கூட்டுறவுச் சங்கக் கம்பனி என்பவற்றின் தலைவராக இலங்கை இளைஞர் சேவைகள் மன்றத் தலைவரே பணியாற்றி வருவதுடன், அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையான வெளிப்படுத்தலைச் செய்யவில்லை.

#### 2.2.3 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துக்கள் சம்பந்தமாக பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததால் நடப்பாண்டில் முற்றாகத் தேய்மானத்திற்குள்ளாகியிருந்த 431 கட்டிடங்கள், 38 மோட்டார் வாகனங்கள், 24,126 அலகுகளை உடைய தளபாடங்களும் உபகரணங்களும் என்பன தொடர்ந்து பயன்படுத்தப்பட்டவாறிருந்தன. அதற்கமைய, மதிப்பிடப்பட்ட வழுவானது இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அவற்றினது மொத்தமான நடைமுறைப் பெறுமதியும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 2.2.4 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதனச் சொத்துக்களின் தேய்மானம், கால்நடை உற்பத்தி மற்றும் கமத்தொழில் பயிர்களது இறுதிக் கையிருப்பு, ஆண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறான பண்ணைகளில் உள்ள கமத்தொழில் பயிர் விளைச்சளது பெறுமதி மற்றும் கமப் பண்ணை உற்பத்திகள் கடனுக்கு விற்பனை செய்யப்படுவதனை கணக்கீடு செய்யப்படாததன் காரணமாக கமப் பண்ணைத் தொழிற்பாட்டுக் கணக்கின் பிரகாரம் ஆண்டின் ஒட்டு மொத்த இழப்பாகிய ரூபா 457,732 இன் சரியானதன்மை உறுதி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீரிகம மற்றும் புளத்சிங்கல பயிற்சி நிலையங்களில் முறையே கட்டிடப் பழுதுபார்த்தல் மற்றும் கட்டிடம் ஒன்றை நிர்மாணித்தல் தொடர்பாக 2014 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 11,000,000 தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகள் மன்றத்தின் தலைமை அலுவலகத்திற்கு அறிவிக்கப்படாது இளைஞர் சேவைகள் நிலையப் பொறுப்பாளர்களின் ஒருங்கிணைப்புடன் நடைபெற்றிருந்ததுடன், அச்செலவினம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டினது முடிவில் வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் கம்பனிக்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய கடன் மீதி ரூபா 5,297,222 ஆகும். எனினும், அக்கம்பனியிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் அம்மீதி ரூபா 45,148,216 ஆகியமையால் ரூபா 39,850,994 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் நிதி ஆண்டு தொடர்பாக 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 4 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு 2010 யூலை 30 ஆந் திகதியளவிலும் பதில் வழங்கப்படவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பின்வரும் கணக்கீட்டு விடயங்களுக்கெதிரே காட்டப்பட்ட சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்கீட்டு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| i. | பயிற்சி நிலையங்களில் வெளியேயிருந்தும் உள்வாரியாகவும் உசாத்துணையாளர்களை ஆட்சேர்த்தல் | - | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மன்றத்திற்குரிய பயிற்சி நிலையங்களில் சேவை புரியும் வெளி மற்றும் நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள உசாத்துணையாளர்களது எண்ணிக்கை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான தகவல்கள். |
| ii. | பெஹெரகத தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தல் | - | பட்டங்கல பயிற்சி நிலையத்தில் 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடைபெற்று வெளியாகிய 14 தலைமைத்துவப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்குச் சமூகமளித்த பயிற்சி உசாத்துணையாளர்களது பெயர்கள், பதவி மற்றும் பணி புரியும் நிறுவனம் தொடர்பான தகவல்கள் மற்றும் அந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 134,000 பெறுமதியான உபகரணங்களுக்குரிய பொருட்பதிவேடு |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2014 ஆகஸ்ட் 15 ஆந் திகதி முதல் 17 வரை இலங்கை சட்ட மாணவர் சங்கத்தின் மாணாக்கர் பொருட்டு பட்டங்கல பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | 818,000 | நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கு பற்றியதாகக் குறிப்பிட்டிருந்த 80 மாணாக்கர்களது பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் போன்ற தகவல்கள். |

**2.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்**

நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 987,000 கூட்டுத்தொகையுடைய 2 கடன்பட்டோர் மீதிகள் 7 ஆண்டுகளாகவும் 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 625,910 கடன் மீதிகள் 6 முதல் 18 ஆண்டுகள் வரையாகவும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப் பிரமாணம் 104(1) | 2014 முதல் 2015 ஜூலை 30 வரையான காலப்பகுதியின் போது 29 வாகனங்கள் 43 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், அதில் ஒரு வாகனம் 07 மாதங்களுக்குள் 4 சந்தர்ப்பங்களில் விபத்துக்குள்ளாகியிருந்தது. அவ்விபத்துக்களாலான இழப்புகள் மற்றும் பொறுப்பானவர்களை நிச்சயித்துக்கொள்ளல் போன்றவற்றிற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 772 | கம்பஹா மாவட்ட அலுவலகத்தில் 1993 முதல் பொருட்கணிப்புச் சபையால் அகற்றப்படவேண்டுமென பரிந்துரைக்கப்பட்ட 18 அலகுகளுக்கான பொருட்கள் கணக்காய்வுத் தினமான 2015 நவெம்பர் 30 வரை அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது. |
| (iii) நிதிப் பிரமாணம் 1647(உ) | வாகனங்கள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பதிவேடு பேணப்படவில்லை. |
| (ஆ) 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | மன்றத்துக்குச் சொந்தமான வாகனங்களது எரிபொருள் எரிவு பரிசீலிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் மன்றத்தின் செயற்பாட்டு நடவடிக்கைககளால் நிதி விளைவுகளில் ரூபா 282.84 மில்லியன் பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. இதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 150.83 மில்லியனாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது பற்றாக்குறையில் ரூபா 132.01 மில்லியன் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது இளைஞர் அபிவிருத்திச் செலவினம் ரூபா 256.05 மில்லியனால் குறைவடைந்த போதும், அரச நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு அமைப்புகளிலிருந்து பெறப்பட்டவை உள்ளடங்களாக வெளிப் பங்களிப்பு ரூபா 180.90 மில்லியன் குறைவடைந்தமையும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 232.89 மில்லியன் அதிகரித்திருந்தமையும் மேற்படி பற்றாக்குறை அதிகரிப்புக்கு முக்கிய காரணிகள் ஆகின.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளது நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும்போது 2011 முதல் 2013 வரை தொடர் பற்றாக்குறை தென்பட்டபோதும், 2014 ஆம் ஆண்டில் அது 40 சதவீதத்தால் குறைந்திருந்தது. ஆயினும், மீளாய்வாண்டின்போது அப்பற்றாக்குறை மீண்டும் 88 சதவீத அதிகரிப்புக்குள்ளாகி ரூபா 282.84 மில்லியன் ஆகியிருந்தது. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் செயற்பாட்டுச் செலவினம் மற்றும் இளைஞர் அபிவிருத்திச் செலவினம் என்பன முறையே ரூபா 517.96 மில்லியனாலும் (79 சதவீதம்) ரூபா 144.2 மில்லியனாலும் (32 சதவீதம்) அதிகரித்திருந்தமை இதற்கு முக்கிய காரணிகள் ஆகின.

எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானத்தைக் கருத்திற் கொள்ளுமிடத்து மன்றத்தின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டிலிருந்தே அதிகரிப்பைக் காட்டியிருந்த போதும், அது மீளாய்வாண்டு முடிவில் ரூபா 642.25 மில்லியன் ஆகியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயல் முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது செயல் முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், தேசிய இளைஞர் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட முக்கிய நோக்கத்தை ஈடேற்றுவதற்கான நேரடிப் பங்களிப்பை வழங்கும் 06 நிகழ்ச்சித்திட்டங்களை அமுலாக்குவதற்கு ரூபா 141 மில்லியன் கூட்டுத்தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும், அந்நிகழ்ச்சித்திட்டங்கள் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மன்றத்தால் ஆற்றப்படும் சேவைகள் கிராமிய மட்டத்தில் இளைஞர்களுக்கிடையேயும் யுவதிகளுக்கிடையேயும் கொண்டு செல்லப்படும் வழியாக 2015 ஆம் ஆண்டின் முடிவளவில் தீவடங்கிலும் 15,000 இளைஞர் கழகங்களை அமைப்பதற்குத் தீர்மானித்து, 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 14,013 கிராம சேவைப் பிரிவுகளில் 13,157 இளைஞர் கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இந்த இளைஞர் கழகங்களில் 340,463 பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் இருந்தபோதும், 2015 ஆம் ஆண்டில் நடைபெற்ற இளைஞர் பாராளுமன்றத் தேர்தல்களின் போது 57,621 அங்கத்தவர்கள் மாத்திரமே வாக்களித்திருந்தனர். அதற்கமைய, இளைஞர் சமுதாயம் ஆக்கபூர்வமாக இளைஞா கழகங்களைச் சார்ந்துள்ளனரா என்பது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

(இ) மீளாய்வாண்டின் போது மன்றத்தின் 46 பயிற்சி நிலையங்கள் அமுலாக்கிய 541 பயிற்சிக் கற்கைநெறிகளில் 14,511 மாணாக்கர் பயிற்சி பெற்றிருந்தனர். 262 பகுதி நேரக் கற்கை நெறிகளைப் பயின்ற 5,984 மாணாக்கரும் இதில் உள்ளடங்குவர்.

எவ்வாறாயினும், தற்கால இளைஞர் சமூதாயம் எதிர்நோக்கும் வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வாக உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் நிலவும் வேலைவாய்ப்புகளுக்குப் பொருந்தி வருமாறு சிறந்த தொழில்சார் பயிற்சியை வழங்குவதற்கு மன்றம் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது கீழே குறிப்பிடப்பட்ட விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(i) மேற்படி 541 கற்கைநெறிகளில் 439 கற்கைநெறிகளுமே NVQ அல்லாத கற்கை நெறிகளாக உள்ளமையும் 2,267 மாணாக்கர்கள் பங்குபற்றிய 75 கற்கை நெறிகளுமே மொழிப் பயிற்சிக்கான கற்கை நெறிகளாக இருந்தமையும்.

(ii) கற்கை நெறிகளை அமுலாக்கிய விரிவுரையாளர்களில் 72 பேர் மாத்திரமே நிரந்தர விரிவுரையாளர்கள் ஆவர். 279 பேர் வெளி விரிவுரையாளர்கள் ஆவர் மற்றும் அவ்வெளி விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்கு முறையான நடைமுறைகள் இல்லாதிருந்தமை.

(iii) மீளாய்வாண்டின்போது மன்றத்திற்குச் சொந்தமான 14 கமப் பண்ணைகளில் ஏறக்குறைய 05 பண்ணைகள் 05 கமத்தொழில் பயிற்சிக் கற்கை நெறிகளைப் பயிற்றுவித்து 33 மாணாக்கரை மாத்திரம் பயிற்றுவித்திருந்தமை.

(iv) பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கட்டணத்தை அறவிடுவதற்கு முறையான அடிப்படை அல்லது நடைமுறை இல்லாததுடன் மற்றும் ஒரே கற்கை நெறிக்கு வெவ்வேறு நிலையங்களில் வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்பட்டுமிருந்தன. சில கற்கை நெறிக் கட்டணங்களுக்கு இடையே ரூபா 10,000 வரையான வேறுபாடுகள் நிலவிய சந்தர்ப்பங்களும் அதானிக்கப்பட்டன.

(v) கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்யும் மாணாக்கர்களுக்கு வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் தொடர் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தலுக்கான திட்டமெதுவும் இல்லாமை.

(ஈ) சபைக்குச் சொந்தமான 14 பிரதேசங்களில் உள்ள ஏறக்குறைய 290 ஏக்கர் கமத்தொழில் காணிகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏறக்குறைய 134 ஏக்கரில் நிரந்தரப் பயிர்கள், மரக்கறி வகை மற்றும் பழங்கள் பயிரிடப்பட்டிருந்ததுடன் 04 கமப் பண்ணைகளில் கால்நடைக் கட்டுப்பாடு சிறிய அளவிலேயே நடைபெற்றிருந்தது. கமப் பண்ணைத் தொழிற்படு கணக்கின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் கமப் பண்ணைப் பிரிவின் ஒட்டுமொத்த நட்டம் ரூபா 457,732 ஆகும். நாட்டின் தேவைகளுக்குப் பொருந்தி வருமாறு கமத்தொழில் துறையில் இளைஞர்களையும் யுவதிகளையும் கவர்ந்தெடுப்பது மற்றும் மன்றத்திற்கும் நாட்டிற்கும் செலவுச் சுமையை ஏற்படுத்தாது ஆக்கபூர்வமாகக் கமப் பண்ணைகளை நடாத்திச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமை என்பன பின்வரும் நிதி மற்றும் நிர்வாக நலிவுகளிலிருந்து அவதானிக்கப்பட்டது.

i. 2015 ஆம் ஆண்டில் கமப்பண்ணை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட வருடாந்த நிதியேற்பாடானது ரூபா 17.5 மில்லியனாகும். அதில் 74 சதவீதமான ரூபா 12.95 மில்லியன் குறித்த அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாததுடன், பயிர்ச் செய்கைக்குட்படுத்தக்கூடிய காணியில் ஏறக்குறைய 54 சதவீத காணியில் புதர்கள் மண்டியிருந்தன.

ii. கமப் பண்ணை அபிவிருத்திக்குள்ள பலங்கள், நலிவுகள், சந்தர்ப்பங்கள் மற்றும் தடைகள் (SWOT ANALYSIS) ஆகியவற்றை இனங்கண்டு

குறுகிய கால மற்றும் நெடுங்காலத் திட்டங்களைத் தயாரித்து அவற்றை அமுலாக்காமை.

iii. கமப் பண்ணைக்கு அண்மையில் பணியாற்றும் பதவியணியினரது எண்ணம் அபிவிருத்தியடைவதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்கும் வேலைத்திட்டமொன்று காணப்படாமை.

iv. கமப்பண்ணை உற்பத்திகளது சிறந்த தன்மையையும் அளவையும் உயர்த்துவதற்கு 14 கமப் பண்ணைகளில் 11 கமப் பண்ணைகளுக்கும் கள உத்தியோகத்தர்களது சேவை பெறப்பட்டிருக்கவில்லை.

v. நிதிசார் ஒழுக்காற்று முறைமையைப் பேணுவதற்குத் தேவையான உள்ளகக் கட்டுப்பாடு முறைமையை அமுலாக்காமை மற்றும் கமப் பண்ணைகளுக்கு அண்மித்த இடங்களில் முறையான கண்காணிப்பு இல்லாமை காரணமாக பின்வருமாறு பல்வகையான முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் நடைபெற்றுள்ளமை புலனாகியமை.

- கடன் அறவிடும் நடைமுறை மற்றும் முறையான உடன்படிக்கை இன்றி கமப் பண்ணைப் பொறுப்பாளர்கள் பன்னல மற்றும் ஹெய்யந்துடுவ கமப் பண்ணைகளில் 2015 ஆம் ஆண்டில் ரூபா 303,376 கூட்டுப்பெறுமதியான கமத்தொழில் உற்பத்திப் பொருட்களைக் கடன் அடிப்படையில் விற்பனை செய்திருந்தமையும் முறையாகக் கணக்கிலிடாமல் ஹெய்யந்துடுவ கமப் பண்ணையில் கணக்காய்வுத் தினமான 2015 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு 3,197 தேங்காய்களையும் பட்டங்கல கமப்பண்ணையில் 2015 மே மாதத்தில் 25 நாட்களின் போது 21,274 முட்டைகளையம் வெளி நபர்களுக்கு கடன் அடிப்படையில் வழங்கியிருந்தமையும்.

- 2006 யூலை 19 ஆந் திகதிய உள்ளகச் சுற்றறிக்கை இலக்கம் மு/1/2007 இன் 06 ஆம் பந்தியின் பிரகாரம் மேலதிக விலைப் பட்டியல் மூலம் பெறப்படும் பணம் அத்தினத்தன்றே மாகாணச் சேகரிப்புக் களத்தில் செலவு வைக்கப்பட வேண்டுமாயினும், பட்டங்கல கமப் பண்ணையில் 2015 சனவரி 29 இல் உள்ளவாறு ரூபா 31,576 மீதித் தொகை வங்கியிலிடப்படாதிருந்தது.

- எத்துன்கம கோழிப் பண்ணையில் 2016 திசெம்பர் 16 இல் உள்ளவாறு 1,538 முட்டைகள் குறைவாக இருந்தன.

- பன்னல கமப் பண்ணையில் மீளாய்வாண்டின்போது 53 சந்தர்ப்பங்களில் ரூபா 211,331 பெறுமதியான உற்பத்திப் பொருட்கள் களஞ்சியத்துக்கு அனுப்பப்படாது வெளி நபர்களுக்கு நேரடியாக விற்பனை செய்யப்பட்டிருந்தது.

- ஹெய்யந்துடுவ கமப் பண்ணையில் ஒரு மாதத்தின்போது 60 பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்பட்டுப் பெறப்பட்ட வருமானமாகிய ரூபா 110,729 கணக்காய்வுத் தினமான 2015 நவம்பர் 19 ஆந் திகதியன்றும் பதிவேடுகளில் பதியப்படாதிருந்தது.

(உ) சமுதாயத்தின் சனநாயகக் கட்டமைப்புக்குள் இளைஞர் பரம்பரையை இணைத்துக்கொள்ளும் நோக்குடன் 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இளைஞர் பாராளுமன்ற நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2010 முதல் 2014 வரை ரூபா 153,555,734 கூட்டுத்தொகையும் மீளாய்வாண்டில் ரூபா 23,862,512 தொகையும்

செலவிடப்பட்டிருந்தன. நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினது செலவினத்தில் 99 சதவீதத்தைக் குறிக்கும் ரூபா 23,615,712 இளைஞர் பாராளுமன்றத் தேர்தல்களை நடாத்துவதற்குச் செலவிடப்பட்டிருந்த போதும், பதிவு செய்யப்பட்ட 340,463 வாக்காளர்களில் 17 சதவீதத்தைக் குறிக்கும் 57,621 வாக்காளர்கள் மாத்திரமே வாக்குளைப் பதிவு செய்திருந்தனர். மீளாய்வாண்டின்போது 220 அங்கத்தவர்களின் பங்குபற்றுதலுடன் ஒரேயொரு கூட்டத் தொடர் மாத்திரம் நடைபெற்றிருந்தது. 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற 9 கூட்டுத் தொடர்களில் 3,886 அங்கத்தவர்கள் பங்குபற்றியிருக்க வேண்டிய போதும் 2,605 பேர் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர்.

இளைஞர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கென ஏற்பாடு செய்யப்பட்ட நிதியில் குறிப்பிடத்தக்க சதவீதம் இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு செலவிடப்பட்டிருந்தபோதும், குறித்த இளைஞர் பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கும் ஒட்டு மொத்த இளைஞர் சமுதாயத்திற்கும் ஏற்பட்ட நலன் மதிப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இளைஞர்களுக்கிடையே சரீர சுகத்தையும் விளையாட்டுத்துறை அபிவிருத்தியையும் ஊக்குவிக்கும் நோக்குடன் 4 ஆண்டு வதிவிடப் பயிற்சியுடன் வொலிபோல் மற்றும் கபடி விளையாட்டுகளுக்கான குழாம் ஒன்று ஆரம்பித்திருந்ததுடன், மீளாய்வாண்டு முடிவில் அதில் 28 பேர் பயிற்சி பெற்றுமிருந்தனர். மாணாக்கரது உணவு மற்றும் வதிவிட வசதிகள் தொடர்பாக 2013 தொடக்கம் மீளாய்வாண்டு வரை ரூபா 28,260,716 செலவிடப்பட்டிருந்தபோதும், அப்பயிற்சிகளைப் பெறும் இளைஞர்களதும் யுவதிகளதும் விளையாட்டுத் திறமை மேம்படுத்தப்பட்டு உள்ளூர் மற்றும் சர்வதேச வெற்றிகள் வரை அவர்களை இட்டுச் செல்வதற்குரிய திட்டமிடப்பட்ட நடைமுறைகள் சபையிடம் கிடையாது என்பது குழாத்தில் ஆட்சேர்க்கப்பட்ட இளைஞர், யுவதிகளில் 24 பேர் குழாத்திலிருந்து நீங்கியமை, தேசிய மட்டத்தில் வெற்றியீட்டுவதற்காகப் போட்டிகளில் ஈடுபடுத்தப்பட்டு வெற்றிகளை ஈட்டாமை, தேசிய குழாத்தில் இணைவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்காமை மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்கள் பெறப்படாமை போன்ற விடயங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டன.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தின் தலைமை அலுவலகத்தை அண்மித்த விடுதி மற்றும் பயிற்சி நிலையங்கள் மற்றும் கமப் பண்ணைகளுடன் இணைந்த உத்தியோகபூர்வ மனைகள் சம்பந்தமான சரியான தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாததுடன், ஹெய்யந்துடுவ மற்றும் பட்டங்கல பயிற்சி நிலையங்களில் 06 உத்தியோகபூர்வ மனைகள் இருந்தமை கணக்காய்வுக் களப்பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன. அந்த உத்தியோகபூர்வ மனைகள் உள்ளடங்கலாக மன்றத்திற்குரிய சகல விடுதிகளும் உத்தியோகபூர்வ மனைகளும் முறையான நடைமுறைகளின்றி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையினது XIX அத்தியாயத்தின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் மனைகளுக்கான வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, அம்மனைகளில் மின்சாரம், நீர் மற்றும் பராமரிப்புச் செலவினம் என்பன வெவ்வேறாக இனங்காணப்பட்டு குடியிருப்பாளர்களிடமிருந்து அறவிடப்படாது அவை கமப் பண்ணைகளினதும் பயிற்சி நிலையங்களினதும் செலவினமாகக் காட்டப்பட்டிருந்தன.

(ஆ) மன்றத்தின் பொருள் பட்டோலைப் பொருட்கள் சம்பந்தமாக உள்ள உள்ளகக் கணக்காய்வுக் கட்டுப்பாட்டு நடைமுறை மற்றும் களஞ்சியக் கட்டுப்பாடு வியூகமானது திருப்திகரமாக அமையாததுடன், பொருட்கள் முறையற்றவாறு பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளமையும் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது வெளியாகின. இது சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

i. எரமினியாய பயிற்சி நிலையகத்தில் நடன மற்றும் இசைப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட 36 வகை உபகரணங்களுக்குரிய 82 அலகுகள் மற்றும் அகலவத்தை பயிற்சி நிலையத்திற்கு 2012 ஆம் ஆண்டின்போது களுத்துறை மாவட்ட அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட 2 ஜுகி இயந்திரங்கள் மீளாய்வாண்டு முடிவிலும் பொருட்பட்டோலையில் பதிவு செய்யப்படாதிருந்தன.

ii. ஹெய்யந்துடுவ மற்றும் பன்னல கமப் பண்ணைகளில் உள்ள தென்னை மரங்கள் மற்றும் பொருள் பெறுமதிமிக்க மரங்கள் என்பன பொருட்பட்டோலையில் பதிவு செய்யப்படாததுடன், பன்னல கமப்பண்ணையில் மாத்திரம் 1232 தென்னை மரங்கள் மற்றும் மரப்பலகைப் பெறுமதி மிக்க 541 மரங்கள் உள்ளமை தெரியவந்தது. அவ்வாறே, அம்மரங்களை அப்புறப்படுத்தும்போது அவற்றினது பெறுமதியைச் சரிவர மதிப்பிட்டு அவற்றைக் கணக்கிலிடுவதற்கான முறையான நடைமுறை இல்லாதிருந்தது.

iii. 02 மாவட்ட அலுவலகங்களிலும் ஒரு விவசாயப் பண்ணையிலும் 881 அலகுகளில் பொருட்களின் குறைவும் கம்பஹா மாவட்ட அலுவலகத்தில் பணியாற்றி விலகியிருந்த 4 உத்தியோகத்தர்களது பொறுப்பில் இருந்த 157 அலகுப் பொருட்களது குறைவு சம்பந்தமாகவும் 757(2) ஆம் நிதிப் பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

iv. கம்பஹா மாவட்ட அலுவலகத்தின் கணனிகளிலிருந்து அரசியல் கட்சி அலுவலகம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 347,000 பெறுமதியான 04 கணனிகளில் 02 திருப்பி ஒப்படைக்கப்படாதிருந்தன. இது சம்பந்தமாகப் பொருள் மெய்மையாய்வு மூலமும் தகவல்கள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரது பரிந்துரை, கொள்வனவுக் குழு அங்கீகாரம் மற்றும் சேவை உடன்படிக்கையொன்று இன்றி நிஸ்கோ வீடியோப் பிரிவுக்குரிய சோனி வகையான 2 கெமராக்கள் ரூபா 90,467 மதிப்பீட்டுக் கிரயத்தில் 2014 ஜுலை 25 அன்று பழுதுபார்க்கப்பதற்காக வெளி நிறுவனம் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தினமான 2016 ஏப்ரல் 11 ஆந் திகதியளவிலும் பழுதுபார்த்தல் பூர்த்திசெய்யப்பட்டுப் பொருட்கள் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) காணிப்பெறுமதியான ரூபா 13,833,693 உடைய 9 பயிற்சி நிலையங்கள் மற்றும் கட்டிட நிர்மாண வேலை மற்றும் மறுசீரமைப்பு என்பவற்றிற்கு ரூபா 136,094,262 செலவிடப்பட்டிருந்த 28 பயிற்சி நிலையங்களினதும் 15 பிரதேச அலுவலகங்களினதும் உரித்து சட்டபூர்வமாக மன்றத்திடம் ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மஹரகமவில் அமைந்துள்ள ஸ்ரீ லங்கா யூத் நிலையத்தின் விடுதியின் பின்புறத்தே உள்ள எல்லை மதிலின் நிர்மாண வேலை நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்ததுடன், அதன் மதியுரை நடவடிக்கைகளின் பொருட்டு 2013 ஆம் ஆண்டின்போது தனியார் கம்பனி ஒன்றிற்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 147,558 மீண்டும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**4.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

2012 ஆம் ஆண்டின் போது நிஸ்கோ வீடியோ பிரிவிற்கு கெமரா உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 100,000 கொடுப்பனவு செய்து உசாத்துணையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், சேவை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் உசாத்துணைக் கட்டணத்தில் 60 சதவீதமாகிய ரூபா 60,000 முற்பணமாக

வழங்கப்பட்டிருந்தது. குறித்த உசாத்துணை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை முறையாக உறுதி செய்யாது எஞ்சிய தொகை 2014 திசெம்பர் 30 அன்று கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.4 வெளிப்படையான முறைபாடுகள்

-----------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சட்டக் கல்லூரியின் மாணவர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய 120 மாணாக்கரின் பொருட்டு 2014 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றிற்கு ரூபா 818,000 கூட்டுத்தொகை மீளாய்வாண்டின்போது வழங்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் பயிற்சி உசாத்துணையாளர் ஒருவர் இல்லாது அதில் ரூபா 134,000 செலவழிக்கப்பட்டு வெளிவாரிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டு, மன்றத்தின் பட்டங்கல பயிற்சி நிலையத்தில் அவை பொருத்தப்பட்டிருந்தன. அப்பயிற்சியானது பட்டங்கல பயிற்சி நிலையத்தில் நடைபெற்றிருந்தபோதும், 120 மாணாக்கரைப் பயிற்றுவிப்பதற்கு ரூபா 4,950 வீதப்படி ரூபா 594,000 மற்றும் உணவுக்கென ரூபா 90,000 என மொத்தமாக ரூபா 684,000 வெளி நிறுவனத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

வரவு அறிக்கைகளின் பிராகாரம், 40 மாணாக்கர் மாத்திரம் கலந்து கொண்டதாகக் கணக்காய்வில் புலனாகியபோதும் அந்த 40 மாணாக்கர் உட்பட 120 மாணாக்கர் பங்குபற்றியதாக மோசடியான ஆவணம் உறுதிச் சான்றுடன் இணைக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, நிகழ்ச்சித்திட்டத்தில் கலந்துகொள்ளாத 80 பேருக்கு ரூபா 396,000 கூட்டுத் தொகை கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) கம்பஹா மாவட்ட இளைஞர் சங்கச் சம்மேளனத்தால் முறையான அங்கீகாரமின்றி அரச வங்கி ஒன்றில் பேணப்பட்ட சேமிப்புக் கணக்கிற்கு 2011 முதல் 2015 வரை மன்றத்தின் ஹெய்யந்துடுவ பயிற்சி நிலையத்திற்கு உணவு வழங்குவதற்காக மன்றத்தால் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 28,414,825 செலவு வைக்கப்பட்டிருந்தது. அதில் ரூபா 27,669,809 கொடுப்பனவு செய்யப்பட்டு, நிதியேற்பாடு வழங்கப்படாத இந்த வர்த்தக நடவடிக்கையின் அடையாளம் உறுதி செய்யப்படாத உப ஒப்பந்தகாரர் ஒருவர் மூலம் இது நடைபெற்றிருந்தது.

(இ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.11 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுமதி சேர் வரிக்கெனத் தம்மைப் பதிவு செய்து கொண்ட ஒப்பந்தக்காரராக உறுதி செய்து கொள்ளாது பெறுமதி சேர் வரிப் பதிவை செயலற்றதாக ஆக்கிய 2 ஒப்பந்தகாரர்களுக்கு ரூபா 2,682,451 கூட்டுத்தொகையான வரி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சு, இலங்கை வொலி போல் தனியார் கம்பனி, ஓய்வூதியத் திணைக்களம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் என்பவற்றுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கைப் பிரகாரம், மொபிடெல் M-CASH சேவை மூலம் ஓய்வூதியத்தைப் பெறும் நிகழ்ச்சித்திட்டத்தில் கையடக்கத் தொலைபேசிகளை விநியோகிப்பதற்கு தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இணங்கியிருந்தது. உடன்படிக்கைப் பிரகாரம், விநியோகிக்கப்படும் தொலைபேசிகளுக்காக மன்றத்திற்குக் கிடைக்க வேண்டிய ரூபா 926,600 கிடைக்கவில்லை. மேலும், விநியோகிக்கப்படாத எஞ்சிய தொலைபேசிகள் திருப்பி ஒப்படைக்கப்படாததால் உடன்படிக்கை மீறப்பட்டுள்ளதாகக் குறித்த தொலைபேசிக் கம்பனி மன்றத்திற்கு அறிவித்திருந்தது.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்திற்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்று 2013 ஜூலை 01 தொடக்கம் 2 ஆண்டுகளில் 25 சந்தர்ப்பங்களில் ரூபா 41 இலட்சம் கூட்டுத்தொகையைச் செலவழித்துப் பழுதுபார்க்கப்பட்டிருந்த போதும், அவ்வாகனத்தின் எரிபொருள் நுகர்வு ஒரு லீட்டருக்கு 05 கிலோ மீட்டர் அளவிலான கூடிய பெறுமதியாக இருந்ததாலும் பழுதுபார்த்தலுக்கான கிரயம் அதிகமாக இருப்பதாலும் கணக்காய்வுத் தினமான 2016 ஏப்ரல் 12 ஆந் திகதியளவில் அது பாவனையிலிருந்து நீக்கப்பட்டிருந்தது.

(ஆ) துறைவாரியான நிபுணத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இரத்மலானை பயிற்சி நிலையத்தில் பயன்படுத்தப்பட்டவாறிருந்த கட்டிடம் புதுப்பிக்கப்பட்டு 2015 ஆம் ஆண்டளவில் மாணாக்கரின் எண்ணிக்கையை 3,855 வரை அதிகரிப்பதற்கு எண்ணியிருக்கையில். தேவையான நிதியேற்பாடும் திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களும் இல்லாது, அக்கட்டிடம் உடைத்து அகற்றப்பட்டு 2014 ஆம் ஆண்டின்போது புதிய கட்டிடம் ஒன்றை நிர்மாணிக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2015 ஆம் ஆண்டு முடிவிலும் கட்டிடம் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன், 2014 ஆம் ஆண்டின்போது பயிற்சி நிலையத்தை நடாத்துவதற்கென வாடகை அடிப்படையில் பெறப்பட்ட வெளியேயுள்ள கட்டிடம் ஒன்றிற்கு ரூபா 8,959,149 வாடகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு வெளியேயுள்ள அக்கட்டிடத்தைப் பழுதுபார்ப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் ரூபா 4,959,524 செலவிடப்பட்டிருந்தது.

(இ) 2012 ஆம் ஆண்டின்போது வெளிநாட்டுப் பயிற்சிக்கு அனுப்பப்பட்ட அகலவத்தை பயிற்சி நிலையத்தின் தகவல் தொழில்நுட்பக் கற்கை நெறியினது நிரந்தரப் போதனையாளருக்கு அப் பயிற்சியின் பின்னர் 2012 ஜூன் தொடக்கம் நிரந்தர கடமைகள் ஒப்படைக்கப்படாது அத்தினம் முதலாக கணக்காய்வுத் தினமான 2015 செப்தெம்பர் வரை ரூபா 1,193,194 சம்பளமாகவும் 2014 ஜூலை தொடக்கம் ரூபா 61,200 செயலாற்றல் படியாகவும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

### 4.6 செயற்திட்டங்களை அமுலாக்குவதில் நலிவுகள்

அரச சார்பற்ற அமைப்பு ஒன்றின் உதவியுடன் யுத்தத்தில் சிக்கிய முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட இளைஞர்களை சமுதாயமயமாக்கும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினூடாக அமுலாக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 19,459,460 தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. 2015 ஜூன் 30 இல் உள்ளவாறு நிகழ்ச்சித்திட்டம் முடிவடைந்திருக்க வேண்டுமாயினும், 2015 திசெம்பர் 30 ஆந் திகதியளவிலும் அது பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 2014 ஜூன் 26 ஆந் திகதிய MOEP/ERD/2014/01 ஆம் இலக்கச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இச்செயற்திட்டம் தொடர்பாகப் பொதுத் திறைசேரியுடன் கலந்துரையாடித் தேவையான பரிந்துரைகளைப் பெற்றிருக்கவில்லை.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்கு இலங்கை இளைஞர் சமூக சம்மேளனத்திற்கு வழங்கப்பட்ட தொகை ரூபா 12,012,240 ஆகும். இதில் ரூபா 1,027,740 மற்றும் இளைஞர் சேவைகள் மன்றத்தின் ரூபா 1,038,720 என்பன மீளாய்வாண்டு முடிவளவிலும் செயற்திட்டத்தின் நோக்கத்தை ஈடேற்றுவதற்குச் செலவழிக்கப்படாது வைத்திருக்கப்பட்டது.

(இ) இந் நிகழ்ச்சிதிட்டத்துடன் இணைந்தவாறு குறித்த அரச சார்பற்ற அமைப்பினால் இளைஞர் சங்கங்களுக்கு நேரடியாக வழங்கப்பட்ட தளபாடங்களும் உபகரணங்களும், தொலைபேசித் துணைப்பாகங்களும் ஒலிபெருக்கி இயந்திரங்களும் பொருட்பட்டோலையில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.7 ஏனைய அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மன்றத்தின் வளங்கள்**

மன்றத்திற்குரிய 02 வாகனங்கள் முறையே 2012 செப்தெம்பர் மற்றும் 2015 ஏப்ரல் தொடக்கம் முறையற்ற வகையில் வரையறுக்கப்பட்ட இளைஞர் சேவைகள் தனியார் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தன.

**4.8 பதவியணி நிர்வாகம்**

மன்றத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான பதவியணி மற்றும் அவர்களுக்கு இருக்க வேண்டிய தகைமைகள் உள்ளடங்கலாக 2012 நவெம்பர் 22 ஆந் திகதியன்று அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு மீளாய்வாண்டு முடிவளவிலும் முகாமைத்துவம் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையில் உள்ளடங்கிய 1429 பதவிகளுள் 361 பதவிகள் மீளாய்வாண்டு முடிவிலும் வெற்றிடங்களாக இருந்தன.

(ஆ) பிரதான முகாமைத்துவப் பதவிகள் ஐந்து உட்பட ஏனைய நிறைவேற்றுதரப் பதவிகள் 25 தொடர்பாகத் தகைமைகளைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்காது பதவி வெற்றிடமாவதற்கு இடமளித்து வேலைகளை மற்றொருவர் மூலம் மேற்கொள்வதற்கும் விடுவிப்பு அடிப்படையிலும் உத்தியோகத்தர்கள் பணியிலமர்த்தப்பட்டிருந்தனர். அதன் காரணமாக, குறித்த பதவிகளுக்குரிய பொறுப்புகள் சரிவர நிறைவேற்றப்படுவதற்கும் மன்றத்தின் நோக்கை எய்துவதற்கும் தேவையான பங்களிப்பு இந்த உத்தியோகத்தர்கள் மூலம் பெறப்படுகின்றதா என்பது விளங்கவில்லை.

(இ) மத்திய முகாமைத்துவ மட்டத்திலான 19 பதவிகளில் நிலவிய வெற்றிடங்கள் மற்றும் 11 நிர்வாக உத்தியோகத்தர்கள் பதவி அடங்கலாக கீழ்மட்ட முகாமைத்துவ பட்டப் பதவிகளில் 30 வெற்றிடங்கள் நிலவின. அந்த 49 பதவிகளுக்கும் 56 வேலை மேவுகை நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) மன்றத்தின் அடிப்படை நோக்கம் மற்றும் நேரடிப் பங்களிப்பை வகிக்கும் உதவி இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் 332 ஆகும். இதில் 134 பதவிகளும் வெற்றிடங்களாக இருந்தன.

(உ) பதவிகளில் நிரந்தரமாக்கப்படும் போது, அப்பதவிகளுக்குரிய ஆரம்பத் தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதைக் குறித்த சான்றிதழ்களை வழங்கிய நிறுவனங்கள் மூலம் உறுதி செய்துகொள்ளாது சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தமை பல்வேறு சேவைப் பிரிவுகளிலுமுள்ள 13 உத்தியோகத்தர்களது பெயர் வழிக் கோவைகளைப் பரிசீலித்தபோது அவதானிக்கப்பட்டது.

(ஊ) மன்றத்தின் நிரந்தர சேவையில் ஆட்சேர்க்கப்பட்டு, அச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட மற்றும் பதவி உயர்வு வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைப் பிரகாரம் வினைத்திறமைகான தடைப் பரீட்சை 2013 ஆம் ஆண்டு முதல் நடாத்தப்பட்டிருக்காததுடன், 2014 ஆம் ஆண்டின்போது ஆட்சேர்க்கப்பட்ட 244 உத்தியோகத்தர்களும் குறித்தவாறு வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடைபெறாத காரணத்தால் மன்றத்தின் கடமைகள், தமது கடமைக்குரிய பொறுப்பு மற்றும் பொது நிர்வாக சட்டங்கள்

விதிகள், பிரமாணங்கள் தொடர்பான புரிந்துணர்வைப் பெறுவதற்கான சந்தர்ப்பத்தை அந்த உத்தியோகத்தர்கள் இழந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தின் வருடாந்த வருமானத்தின் போதுமானளவு தன்மை மற்றும் பயிற்சி நிலையங்கள், விவசாயப் பண்ணைகள் மற்றும் மொத்தமாக 94 பிரதேச அலுவலகங்களின் மூலம் அச் சேவைகள் தீவடங்கிலும் விரிவாக நடைபெறுவதன் அடிப்படையில் உயர் முகாமைத்துவ மட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தும், தகைமை வாய்ந்த கணக்காய்வாளர் ஒருவரது கண்காணிப்பின் கீழ் சக்திமிக்க உள்ளகக் கூறு ஒன்று செயற்பட வேண்டுமாயினும், மன்றத்தின் வியூக அமைப்பின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வானது மத்திய முகாமைத்துவ II ஆம் மட்டத்திலான பதவி ஒன்றாக உருவாக்கப்பட்டிருந்தது.

(ஆ) தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் அடங்கலாக 9 உத்தியோகத்தர்களைக் கொண்ட உள்ளகக் கணக்காய்வுக் பிரிவு ஒன்றின் மூலம் மீளாய்வாண்டின்போது பல்வேறு துறைகளையும் உள்ளடக்குமாறு 227 பணிப்பொறுப்பு ஒப்படைப்புக்களின் மூலம் கணக்காய்வுத் திட்டம் அமுலாக்கப்பட்டிருந்தது. ஆயினும், மன்றத்தில் நிலவும் உள்ளக நிர்வாக முறைமைகளின் நலிவுகளை இனங்காணும் விதத்தில் உள்ளகக் கணக்காய்வு திட்டமிடப்பட்டும் அமுலாக்கப்பட்டும் இருக்கவில்லை.

(இ) உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடங்கிய சபையின் நிதி மற்றும் நிர்வாக நடவடிக்கைகளில் போதியளவு தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள் தொடர்பாகத் தேவையான திருத்தங்களுக்கான முறையான வேலைத்திட்டமொன்றை மீளாய்வாண்டின் போதிலும் அமுலாக்கப்படாமை காரணமாக, உள்ளகக் கணக்காய்வு முகாமைத்துவ கட்டுப்பாட்டுச் சாதனமாக ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.2 பொருட்கொள்வனவும் ஒப்பந்தச் செயற்பாடும்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினது செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் ஒன்றை மன்றம் தயாரித்து அதனை அங்கீகரிக்குமாறு செய்திருக்கவில்லை.

(ஆ) தேசிய பொருட்கொள்வனவு முகவர் நிறுவனத்தின் 2007 ஆம் ஆண்டிற்கான மதியுரையாளர்களைத் தெரிவு செய்யும் வழிகாட்டலின் 3.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் குறித்த சேவையைப் பெறுவது தொடர்பாக உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாடு (TOR) இல்லாது சிலாபத்திலுள்ள பயிற்சி நிலையத்தை நவீனமயப்படுத்துவதற்கு ரூபா 2,252,765 மதியுரையாளர்களுக்கான கட்டணமாக வழங்கப்பட்டிருந்தது. மேலும், 3.4 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் கட்டணத்தைக் கணிப்பிட்ட விதத்தைத் தெளிவாக அறிவிக்காது ஒப்பந்தப் பெறுமதியின் 5.2 சதவீதத்தை மதியுரைக் கட்டணமாக வழங்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கைக்குள்ளான பெறுமதியில் 70 சதவீதம் ஒப்பந்த ஆரம்பத்திலேயே மதியுரையாளருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன், அனைத்துச் சகல வேலைகளுக்கும் 30 சதவீதம் மாத்திரம் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.

(இ) சிலாபத்திலுள்ள பயிற்சி நிலையத்தை நவீனமயப்படுத்தலுக்குரிய ஒப்பந்தகாரருக்கான முற்பணத்தைக் கணிப்பிடும்போது கொள்வனவு வழிகாட்டிக்

கோவை 5.4.4 இன் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியில் ரூபா 625,000 தற்காலிக நிதி ஏற்பாடாக (Provisional sum) கழித்துக் கொள்ளப்பட்டதால் ரூபா 156,250 கூடுதலாக முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தக் கொடுப்பனவுகளில் தொன்னூறு சதவீதத்தை வழங்குவதற்கு முன்னர் அறவிடப்பட வேண்டிய முற்பணத்தில் ரூபா 845,641 ஆனது இறுதி விலைப்பட்டியல் வரை கழித்துக் கொள்ளப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அறுபது கைவிரல் அடையாளக் குறிப்பு இயந்திரங்கள் ரூபா 4,469,067 கூட்டுத்தொகைக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. இவற்றை 2013 திசெம்பர் 05 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கிப் பொருத்த வேண்டுமாயினும், 2015 ஆம் ஆண்டு முடிவிலும் வழங்கப்பட்டிருந்த 49 இயந்திரங்களுள் 12 பொருத்தப்பட்டிராததுடன், 2 இயந்திரங்கள் செயற்படாமலும் 35 இயந்திரங்களில் மென் பொருட்கள் உள்ளடக்கப்படாதுமிருந்தன.

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட கூறு விலைக் கோரல் பதிவேடு தயாரிக்கப்படாததுடன், தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் மூலம் பரிந்துரைக்கப்பட்ட ரூபா 32,000 குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்த நிறுவனத்திற்குப் பதிலாக கேள்விகள் மதிப்பாய்வு செய்யப்படும்போது புறக்கணிக்கப்பட்டிருந்த ரூபா 33,000 கூறு விலையைக் குறிப்பிட்ட நிறுவனம் வழங்குநராக தெரிவு செய்யப்பட்டமையால் ரூபா 60,000 நட்டம் எற்பட்டிருந்தது.

(ii) பெறுவனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4(i), 8.12.1 (அ) மற்றும் (ஆ) பிரிவுகளுக்கு முரணாக முறையே பிணை முறியொன்றைப் பெற்றுக்கொள்ளாமல் ரூபா 1,117,267 முற்பணமாகவும் வழங்கியும் இயந்திரம் முறையாக இயங்குகின்றது என உறுதி செய்யாமலும் முறையாகப் பொறுப்பேற்று பொருட் பதிவேட்டில் பதியாமலும் இடைக்காலக் கொடுப்பனவாக 2015 ஒக்தோபர் 15 ஆந் திகதி ரூபா 1,675,900 வழங்குனருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், வழங்கிய இயந்திரங்கள் முறையாக இயங்கவில்லை என 2015 செப்தெம்பர் 18 ஆந் திகதிய உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் மூலம் தகவல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(iii) பெறுவனவு உடன்படிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதிக்கு ஈடாக செயலாற்றல் பிணைமுறி பெறப்பட்டிருக்கவுமில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் 6 பிரிவுகளில் பாதீடு செய்யப்பட்ட தொகையிலும் கூடுதலாக 180 சதவீதச் செலவு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 8 பிரிவுகளது நிதியேற்பாட்டில் 31 சதவீதம் நோக்கத்தின் பொருட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவுமில்லை. இதற்கமைய, பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை எனக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

## 5.4 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்ட பின்வரும் குறைபாடுகளைத் திருத்துவதற்கு முகாமைத்துவம் கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(அ) 2014 ஆம் ஆண்டினது பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் மன்றத்தின் ரூபா 2,646,404 கூட்டுத்தொகையுடைய பொருட்குறைவு தொடர்பாக

முறையான பரிசீலனைகளை மேற்கொண்டு நட்டத்தை அறவிடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மன்றம் பயன்படுத்திய 15 வாகனங்கள் 2013 ஆம் ஆண்டின்போது பயன்படுத்தப்படாது அப்புறப்படுத்தப்பட்டு மன்றத்தின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான பயிற்சி உபகரணங்களாகப் பயன்படுத்தப்படுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. குறித்த கணக்கீட்டுக் குறிப்புகளைப் பதிவு செய்யும்போது வாகனங்களது மதிப்பிடப்பட்ட பெறுமதி அல்லது கழிவுப் பொருளாகக் கருதப்படும் பெறுமதி தொடர்பாகக் கவனத்திற் கொள்ளப்படாததுடன், அவற்றினது கிரயமும் திரட்டிய தேய்மானமும் மாத்திரமே அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. அதற்கமைய, வாகனங்களை அப்புறப்படுத்தியமையால் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம் போன்றே பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களது பெறுமதியும் கணக்குப் புத்தகங்களில் உள்ளடக்கப்படாதிருந்தன.

(இ) பேருவளை இளைஞர் நிலையத்தை நிர்மாணிப்பதற்கு 2000 ஜூலை முதல் 50 ஆண்டுகாலக் குத்தகைக்கு ரூபா 3,300,000 செலவிடப்பட்டு நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் இருந்து பெற்றுக்கொண்ட காணியை அபிவிருத்தி செய்வதற்கு 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா 3,398,200 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. காணி பெறப்பட்டு 14 ஆண்டுகள் கடந்திருந்தபோதும், மன்றத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அச்சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 ஜூலை 10 ஆந் திகதிய மன்றத்தினது தீர்மானத்தின் 21/2014 இன் 4.3 ஆம் இலக்கத்தின் பிரகாரம் இளைஞர் சேவைகள் இசைக் கம்பனி மற்றும் இளைஞர் சேவைகள் நாட்டியச் சங்கம் என்பவற்றில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 2,233,190 திறைசேரியின் அங்கீகாரமின்றி புத்தகங்களிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தது.

(உ) 2014 ஆம் ஆண்டு முடிவில் நிறைவேற்றப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களது சேர்ந்து நின்ற செலவினமாகிய ரூபா 93,865,651 கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தன.

(ஊ) 2013 திசெம்பர் 03 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்குக் குழுவினது 24 பரிந்துரைகளை அமுலாக்குவது தொடர்பான தற்போதைய நிலைமை பற்றிய அறிக்கை.

## 06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|---|
| (அ) | பெறுகை | ஒப்பந்தங்களுக்கான மதியுரைச் சேவையைப் பெறுவதில் நலிவுகள் நிலவுதல் |
| (ஆ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | மன்றத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நேரடி பங்களிப்பைக் காட்டும் நிகழ்ச்சித்தித் திட்டங்களுக்கு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியை முறையான திட்டத்துடனும் சரியான கண்காணிப்பின் கீழும் செலவழித்தல். |
| (இ) | கணக்கீடு | மன்றத்தினது சொத்துக்களது சரியான பெறுமதிகளை நிதிக்கூற்றுக்களில் சேர்க்காமை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | பதவியணி நிர்வாகம் | குறித்த காலத்துக்குள் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | பயிற்சிக் கற்கை நெறிகளை நடாத்துதல் | பணம் அறவிடப்பட்டு நடாத்தப்படும் பயிற்சிக் கற்கை நெறிகள் மூலம் எதிர்காலத்தில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய விதத்தில் பாடவிதானத்தை மறுசீரமைக்காமையும் பயிற்சி வழங்கும் விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பதற்குக் கவனம் செலுத்தாமையும். |
| (ஊ) | சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேட்டை ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிப் படிவத்தில் பேணாமை, சொத்துகளது பாதுகாப்பைப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் கீழ் வைத்திராமை, வருடாந்தப் பொருள் மெய்மையாய்வின் மூலம் வெளியாகும் குறைபாடுகள் தொடர்பாக முறையாகப் பரிசீலனை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுக்காமை. |